**ஒதுக்கீட்டுத் தலைப்பு -175 - அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 28 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### (i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 218,608,217 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் இதில் ரூபா 128,387,439 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 90,220,778 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 41 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவின வகை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 106,515,000 | 101,050,344 | 4,244,433 | 4 |
| மூலதனம் | 104,600,000 | 117,557,873 | 85,976,345 | 73 |
| மொத்தம் | 211,115,000 | 218,608,217 | 90,220,778 | |

**(ii) பாதீட்டு முரண்கள்**

* 02 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 80,300,000 தொகையான முழுத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

* 05 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 57 சதவீதத்திற்கும் 83 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

## (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

17501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 5,000,000 | 2,421,886 | 1,500,000 | 1,894,570 | 20,000,000 | 10,725,555 |

## (இ) பொதுவைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் பொதுவைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,202,532 ஆகக் காணப்பட்டதுடன் அது தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **கணக்கு இல.** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா** |
| 6000/0000/00/0015/0078/000 | 4,202,532 |

2 வருடங்கள் பழமைவாய்ந்த ரூபா 447,853 தொகையான 2 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே பந்தி 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 ஒக்டோபர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய முறையே 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 31 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

### 1.4.3 உள்ளகக் கணக்காய்வு

இரண்டு பதவியணியினர்களுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படுகின்ற போதிலும் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டிற்காக அமைச்சு தொடர்பாக ஒரு கணக்காய்வு அறிக்கை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 14,646,550 ஆக இருந்ததுடன் அம்மீதி 1 வருடத்தினை விடக் குறைவான காலப்பகுதிக்குரியதாகும்.

* ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டில் 5 செலவின விடயங்களிலுள்ள சேமிப்புக்கள் போதாதிருந்தது.

### 1.6 இணக்கமின்மைகள்

#### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இனங்கி ஒழுகாமை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) நிதிப்பிரமாணங்கள் | | |
| நி.பி. 371 | 177,098 | உப கட்டுநிதிகள் வழங்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவு பெற்றதும் உடனடியாகாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் தாமதித்து தீர்க்கப்பட்ட 14 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| கொள்வனவு வழகாட்டிக் கோவை / கைநூல் | | |
| (i) 3.5(இ) ஆம் பந்தி | 159,700 | இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட விஷேட சந்தர்ப்பங்களுக்கு புறம்பாக நேர் ஒப்பந்த முறைமையின் கீழ் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 1.7 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

### திவிநெகும உற்பத்தி விற்பனை நிலையத்தை ஸ்தாபித்தல் - லக்சல நிறுவனம்

அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள லக்கல நிறுவனத்தில் திவிநெகும உற்பத்தி விற்பனை நிலையத்தை ஆரம்பிப்பதற்காக ரூபா 100,000,000 தொகையான நிதியேற்பாடு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 75,000,000 தொகையான நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போது திறைசேரி அதற்காக கட்டுநிதி பெற்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவினத் தலைப்பிற்கு வரவு வைத்து அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் லக்சல நிறுவனத்திற்கு நிதி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இது தொடர்பான 2012 திசெம்பர் 04 ஆந் திகதிய 39/2012 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் லக்சலவின் பொறியியலாளர் பிரிவிற்கு இச் செயற்பாடுகளைச் செய்வதற்கான இயலுமை தொடர்பாக ஏற்றுகொள்வதற்கு முடியுமாயின் அதன் மூலம் நிர்மாண அமைச்சின் பூரண மேற்பார்வையின் கீழ் நிதி நிலைமையைப் பொறுத்து பூர்த்தி செய்ய முடியுமென நிதி அமைச்சின் அவதானிப்புக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும்,

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு லச்சலவின் பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) அமைச்சினால் லக்சலவின் பொறியியல் பிரிவு செயற்படுகின்ற நிலையில் காணப்படுகின்றதா எனவும், அதன் பதவியணியினரின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தகைமைகள், அதன் வளங்களின் அளவு, முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகளின் நிலை, லக்சல நிறுவனத்திற்கு இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்குள்ள இயலுமை மற்றும் அதற்காக அமைச்சு அங்கீகாரம் வழங்கிய முறைமை தொடர்பான எந்த வித ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.8 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

**கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளிலிருந்து விலகுதல்**

**தெயட கிருல தேசிய கண்காட்சி நிலத்தில் கண்காட்சிக் கொட்டில்களை நிர்மாணித்தல்**

(அ) ரூபா 5,400,000 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் போட்டியாளர்களின் கூறு விலை கோரப்படாமல் ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) கொள்வனவுக் கைநூலிற்கான மேலதிக 20(ii) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் கொள்வனவுச் செயற்பாட்டு நடைமுறைகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் இந்தச் செயற்பாடுகள் மிகவும் அவசரமானதாகவும், மிகவும் விசேடமான செயற்பாடாகவும் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கேள்வி நடைமுறைகளைப் புறக்கணிக்கும் போது அதற்கான காரணங்கள் தெளிவாக எழுதப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதி அனுப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கேள்விச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்னர் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) இறுதிக் கொடுப்பனவு செய்வதற்காக அல்லது அது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட சிற்சில விடயங்கள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக எந்த கழிப்பனவுகளும் மேற்கொள்ளப்படாமல் மொத்த மதிப்பீட்டுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(ஊ) கொட்டில்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட இரும்புச் சட்டங்களுக்காக மதிப்பீட்டிலுள்ள கூறுவிலைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போது ஒப்பந்தக்காரரினால் அவை கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

(எ) குழுவின் அறிக்கையின் பிரகாரம் சகல இரும்புச்சட்டங்களும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு கழற்றிச் செல்லுமாறு ஆலோசனை வழங்கியமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிறுவனங்களினால் அவைகள் கையேற்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 1.9 நட்டங்களும் சேதங்களும்

2012 ஆம் ஆண்டின் போது 04 வாகனங்கள் விபத்துக்களுக்கு உள்ளாகியமையின் காரணமாக பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,205,727 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 15 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 56 | 36 | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 33 | 33 | - |
| (v) | ஏனையோர் (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 03 | 01 | 02 |
| | மொத்தம் | 114 | 88 | 26 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 26 வெற்றிடங்களை நிரப்பவதற்கு முடியாதிருந்தது.